**ஏழாவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை 01.**

**முன்னிலை– திருமதி.A. Daoudh Ammal, B.A., M.L.,**

**7வது பெருநகர குற்றவியல் நடுவர்.**

**பி.ஆர்.சி.எண். 01/2017**

**2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் நாள்.**

காவல் ஆய்வாளர்,
பி–1 வடக்கு கடற்கரை காவல் நிலையம், - முறையீட்டாளர்.
சென்னை – 1. குற்ற எண்.446/2013

//எதிராக//

1. இளையராஜா (எ) ரேவ்ரமேஷ், ஆ/35
த/பெ. பாளையம்
2. வில்மணி, ஆ/30
த/பெ. ஏழுமலை -எதிரிகள்

<u>உத்தரவு</u>

கடந்த 07.06.2013 ஆம் தேதி இரவு சுமார் 21.00 மணியளவில் சாட்சி1 கிருபா சொந்த வேலையாக பி.1 வடக்கு கடற்கரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இராஜாஜி சாலை கிளைவ் பேட்டரி அருகே தனது ஹோண்டா இரு சக்கர வாகனத்தில் வரும்போது அங்கிருந்த 1ஆம் எதிரி இளையராஜா (எ) ரேஷ்ரமேஷ் மற்றும் 2ஆம் எதிரி வில்மணி (இறந்துபோன எதிரி) இருவரும் சேர்ந்து சாட்சி 1 கிருபாவை வழிமடக்கி நிறுத்தி கத்தியை காட்டி மிரட்டி பணம் கேட்டுள்ளார்கள். அப்போது சாட்சி 1 கிருபா பணம் தர மறுக்கவே 2 ஆம் எதிரி வில்மணி (இறந்துபோன எதிரி) சாட்சி 1 கிருபாவை பிடித்துக் கொள்ள 1ஆம் எதிரி இளையராஜா (எ) ரேவ்ரமேஷ் தன்னிடம் இருந்த கத்தியால் சாட்சி1 கிருபாவின் வயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்தி உள்ளார். எனவே சாட்சி1 கிருபா சத்தம் போடவே எதிரிகள் இருவரும் ஓத்தா உன் குடும்பத்தையே ஒழித்து கட்டிவிடுவேன் என்று மிரட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளார்கள். எனவே சாட்சி 1 கிருபாவை 1ஆம் எதிரி இளையராஜா (எ) ரேவ்ரமேஷ் மற்றும் வில்மணி (இறந்துபோன எதிரி) ஆகிய இருவரும் வழிமறித்து அசிங்கமாக பேசி பணம் கேட்டு தகராறு செய்து கத்தியால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி கொலையுறு மிரட்டல் செய்துள்ளதால் எதிரிகள் மீது பிரிவுகள் 341, 294(b), 307, 506(ii) இதசாவின் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 207 வது பிரிவுப் படி இலவசமாக கொடுக்கபட்டன, எதிரிகள் மீதான இவ்வழக்கு இதச பிரிவின் 307 கீழ் படியான குற்றமானது அமர்வு நீதிமனறத்தால் மட்டுமே விசாரணை செய்யதக்க குற்றமென்பதால் வழக்கை கு.வி.மு.ச. பிரிவு 209(அ) படி அமர்வு நீதிமன்ற மேல் விசாரணைக்காக அனுப்பி வைக்க உத்தரவுப்படுகிறது.

3) 209 இவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது 2 ஆம் எதிரி வில்மணி ஏழாவது பெருநரகுற்றவியல் நடுவர் நீதிமன்ற உத்திரவின்பேரில் 31.03.2015 முதல் பிணையில் இருந்துவந்த நிலையில் 02.10.2019 ஆம் தேதியன்று இறந்து விட்டார். எனவே அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்ததன் பேரில் அவருக்கு எதிரான குற்றம் அற்று விட்டதாக முடிவு செய்யப்படுகிறது. எனவே 1ஆம் எதிரி அமர்வு நீதிமன்ற உத்திரவின்பேரில் பிணையில் இருந்து வருகிறார். எனவே அவர் அவ்வாறே தொடார்ந்து இருக்கவும் மேலும் எதிரி 05.03.2021 ஆம் தேதி சென்னை அமர்வு நீதிமன்றத்தின் முன்பாக ஆஜராக வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட பதிவுக்கட்டுகள் தாக்கல் செய்யப்படவேண்டிய அனைத்து ஆவணங்களையும் மற்றும் சான்றுப்பொருட்களையும் அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கு.வி.மு.ச. 209(இ) பிரிவின் படி உத்தரவிடுகிறது.

5) இவ்வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பிவைக்கப்பட்டது குறித்து இவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு ஒப்படைவு செய்யப்பட்ட விவரத்தை அரசு வழக்குறைஞருக்கு தெரிவிக்க கு.வி.மு.ச 209 பிரிவுப்படி உத்தரவிடுகிறேன்.

6) எதிரியிடம் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கை வழக்குறைஞர் வைத்து வாதாட வசதி உண்டா என்று கேட்டபோது எதிரி வசதி உண்டு என்றார்.

// இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2021 ஆம் பிப்ரவரி மாதம் 5 ஆம் நாள்/ //

=ஒப்பம்=
(திருமதி. அ. தாவூத் அம்மாள், )
ஏழாவது பெருநகர குற்றவியல் நீதிமன்ற நடுவர்.
ஜார்ஜ் டவுன், சென்னை =1.

/உண்மைநகல்/

ஏழாவது பெருநகர குற்றவியல் நீதிமன்ற நடுவர்
ஜார்ஜ் டவுன், சென்னை =1.